தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மன்மத, புரட்டாசி 5, திருவள்ளுவர் ஆண்டு—2046

2015 செப்டம்பர் 22, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி."

கொடுக்கும் பண்பு, முகம் மலர்ந்து பேசல், நீதி தவறாத ஆட்சி, குடிமக்களைக் காத்தல் ஆகிய நான்கும் கொண்ட அரசர் மற்ற அரசர்களுக்கெல்லாம் ஒளிவிளக்கு போன்றவர் ஆவார்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். (குறுக்கீடுகள்)*

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி மற்றும் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கறுப்புத் துண்டு அணிந்து அவைக்கு வந்தனர்.) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 315, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

[2015 செப்டம்பர் 22

315—

பள்ளியைத் தரம் உயர்த்துதல்

***17607—திரு. ஏ.கே. போஸ்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வடக்குத் தொகுதி, அண்ணாநகர், சாத்தமங்கலத்திலுள்ள நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அண்ணாநகர், சாத்தமங்கலம், நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவதற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிபந்தனைகளை நிறைவு செய்யாததால், இப்பள்ளியைத் தற்போது உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்த இயலாது என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.*

திரு. ஏ.கே. போஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதி காக்கவும். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.*

திரு. ஏ.கே. போஸ்: *உலகம் போற்றும் உத்தமத் தலைவியே! 10 கோடி தமிழர்களின் பாசத்தில் விளைந்த பாசத் தலைவியே! (மேசையைத் தட்டும் ஒலி) தன் மெய்வருத்தி தமிழக மக்களை வழி நடத்தும் தர்மத் தாயே! சட்டமன்றத்தில் சரித்திரத் தீர்மானங்களை நிறைவேற்றிய சரித்திரத் தாயே! பச்சிளங்*

2015 செப்டம்பர் 22]

குழந்தைகளுக்குப் பரிசுப் பெட்டகம் தந்த பாசத் தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) உலக அரங்கில் தொழில்நுட்ப முதலீட்டாளர்களை ஒருங்கிணைத்த உத்தமத் தலைவியே! தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர், கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அண்ணாநகர் பகுதியில் அதிகமான தனியார் பள்ளிகள் இருப்பதால், அப்பகுதியிலுள்ள ஏழை மாணவர்கள் படித்துப் பயன்பெறுவதற்கு வசதியாக, தற்சமயம் சாத்தமங்கலத்திலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை வடக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அண்ணாநகர், சாத்தமங்கலத்திலுள்ள நடுநிலைப் பள்ளி ஒரு ஏக்கர் நிலப்பரப்பிலுள்ளது. இப்பள்ளியில் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களின் மொத்த எண்ணிக்கை 115 ஆகும். இப்பள்ளியில் 8 ஆம் வகுப்பில் தற்போது 19 மாணவ, மாணவியர்களே கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் ஒரு தலைமையாசிரியர், இரண்டு பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் ஐந்து இடைநிலை ஆசிரியர்கள் என, மொத்தம் 8 ஆசிரியர்கள் தற்போது பணிபுரிந்து வருகின்றனர். பொது மக்கள் பங்களிப்புத் தொகையான ரூ.1 இலட்சம் ஏற்கெனவே அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. இப்பள்ளிக்கு 5 கிலோ மீட்டர் சுற்றளவில் இளங்கோ மாநகராட்சி மேல்நிலைப் பள்ளியும், கந்தசாமி கொத்தனார் உயர்நிலைப் பள்ளியும் உள்ளன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்தக் கோருவதால், இப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்பட்சத்தில், அரசின் நிதிநிலையைக் கருத்தில்கொண்டு, தேவைக்கேற்ப, மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று, உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.*

திரு. ஏ.கே. போஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தமங்கலம் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரமுயர்த்துவது குறித்த கோரிக்கை, 'மக்களுக்கு, பள்ளிக்கு, கல்விக்கு' முதலிடம் கொடுக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றி கூறி, விடைபெறுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 316, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

316—

மாணவர் விடுதி

***47574—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஒன்றியம், சீளியூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி கட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

TRUTH ALONE TRIUMPHS